# மூட்டா

MUTA

## கோரிக்கை மாநாடு - 27.2.2011, திருநெல்வேலி.

## கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள்

### மத்திய அரசு நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள் :

1. புதிய யு.ஜி.சி ஊதிய விகிதத்தில் PBIII மற்றும் PBIV இவற்றிற்கிடையிலுள்ள பெரும் வித்தியாசத்தை குறைக்கும் வகையில் PBIII ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க வேண்டும்.
2. கல்லூரி ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையான "1.1.96 முதல் பணிமேம்பாடு" கோரிக்கையை மத்திய அரசு உடனே நிறைவேற்றிட வேண்டும்.
3. சுயநிதி கல்லூரிகள்/வகுப்புகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் யு.ஜி.சி. ஊதியம் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. புதிய ஓய்வூதியத்திட்டத்தை கைவிட்டு 1.1.2004க்கு முன்பிருந்த ஓய்வூதிய திட்டத்தை மத்திய அரசும் அனைத்து மாநில அரசுகளும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. சுயநிதி கலை, அறிவியல் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து சுயநிதி உயர்கல்வி நிறுவனங்களின் செயல்பாட்டை முறைபடுத்திட தேவையான சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும்.
6. அயல் நாட்டு கல்வி நிறுவனங்களுக்கு இந்திய உயர்கல்வியை திறந்துவிடும் அந்நிய பல்கலைக்கழக மசோதாவை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.
7. மத்திய அரசானது தேசிய உற்பத்தியில் 6 விழுக்காட்டை கல்விக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

### தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள் :

1. அனைத்து சுயநிதி கல்லூரிகளிலும்/வகுப்புகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியமானியம் வழங்க வேண்டும்.
2. சுயநிதிக்கல்லூரிகள் மற்றும் வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு முறையான நியமன ஆணை, UGC ஊதிய விகிதம், பணிபாதுகாப்பு, வங்கிமூலமாக ஊதியம், PF பங்களிப்பு, ESI வசதி, மகப்பேறு விடுப்பு, மருத்துவவிடுப்பு மற்றும் இதரவிடுப்புகளை உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களைப்போல் வழங்க வேண்டும்.
3. மத்திய அரசும், யு.ஜி.சியும் பரிந்துரைத்தவாறு
   - (i) 2006 ஆம் ஆண்டிற்கான ஊதிய நிலுவைத் தொகையினை ஒரே தவணையாக ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும்.
   - (ii) வீட்டுவாடகைப்படி, போக்குவரத்துப்படி, தினப்படி, கல்விப்படி போன்ற அனைத்து படிகளையும் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும்.
   - (iii) முழு ஓய்வூதியம் பெறத்தகுதியான காலத்தை 20 வருடமாக நிர்ணயம் செய்ய வேண்டும்.
   - (iv) பெண் ஆசிரியைகளுக்கு 6 மாதகால மகப்பேறு விடுப்பு வழங்கவேண்டும்.
   - (v) 40% தொகுப்பு ஓய்வூதியம் (Commutation) வழங்க வேண்டும். அதற்கு பிடித்தம் செய்யும் தொகைக்கான வட்டியை 8% இலிருந்து 4% ஆக குறைக்க வேண்டும்.
   - (vi) கல்லூரி ஆசிரியருக்கான ஓய்வுபெறும் வயதை 65 ஆக உயர்த்த வேண்டும்.
4. புதிய ஓய்வூதிய திட்டம் (Contributory Pension Scheme) கைவிடப்பட்டு 1.4.2003 நாளுக்கு முன்பிருந்த ஓய்வூதிய திட்டத்தினை (Defined benefit Scheme) அனைத்து ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் தமிழக அரசு நடைமுறைப்படுத்திட வேண்டும்.
5. கல்லூரிகளில் காலியாகவுள்ள அனைத்து ஆசிரியர், அலுவலர் மற்றும் பகுதிநேர ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

6. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் மனோகல்லூரிகள் மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரிகள், அன்னை தெரசா பல்கலைக்கழக கல்லூரி ஆகியவற்றை அரசுக்கல்லூரிகளாக மாற்ற வேண்டும். மேலும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசுக்கல்லூரி ஆசிரியர்களுக்குரிய காலமுறை ஊதியம் மற்றும் பணி நலன்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்று சட்டம் 1976, சுயநிதிக்கல்லூரிகள்/வகுப்புகளுக்கும் பொருந்தும் என நீதிமன்ற தீர்ப்பு உள்ளது. எனவே சுயநிதி கல்லூரிகள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் அரசு தலையிட வேண்டும்.

8. மனோ கல்லூரிகளில் தேவையான வகுப்பறைகள், நூலகவசதி, Computer lab வசதி, தேவையான கழிப்பிட வசதி, விளையாட்டு உபகரணங்கள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி மனோ கல்லூரிகள் நிரந்தர கட்டிடத்தில் இயங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. 1.1.96 ஊதிய நிர்ணயப்படி 1.7.2006 முதல் 30.9.2010 வரையிலான காலத்தில் விரிவுரையாளர் (SS), விரிவுரையாளர் (SG) பணி மேம்பாட்டினை அடைந்திட்டோர்களுக்கு முந்தையை பணி மேம்பாடு வழங்கி புதிய ஊதியத்தினை நிர்ணயம் செய்ய வேண்டும்.

10. 1.1.2006க்கு பின்னர் Ph.D பட்டம் பெற்றவருக்கு மட்டும் புதிய ஊதிய நிர்ணயப்படி 3 ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. இவர்களைவிட 1.1.2006க்கு முன்னர் Ph.D பட்டம் பெற்று Ph.D ஊக்க ஊதிய உயர்வு பெற்றும் பணியில் மூத்த ஆசிரியருடைய ஊதியம் குறைவாக நிர்ணயக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய முரண்பாடு களையப்படவேண்டும்.

11. மூத்தோர் இளையோர் ஊதிய முரண்பாட்டை களைந்திட கல்லூரியை ஒரு அலகாக கருத வேண்டும்.

12. அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியார் பல்கலைக் கழகங்களாக மாற்றும் அரசின் முடிவை முற்றிலுமாக கைவிட வேண்டும்.

13. ஆசிரியர் அலுவலர்க்கான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தை தனியார் நிதி நிறுவனமான ஸ்டார் ஹெல்த் இன்சுரன்ஸ் மூலமாக நடை முறைப்படுத்தாமல் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

14. பணி மேம்பாட்டிற்கான புதிய விதிகள் நடைமுறையாகும் வரையில் தேர்வுநிலை விரிவுரையாளர்/Reader ஆகியோரை மூன்று வருட பணி முடித்தவுடன் எவ்வித நிபந்தனையும் இன்றி இணை பேராசிரியராக பணி மேம்பாடு செய்ய வேண்டும்.

15. கல்லூரி ஆசிரியர்கள் ஒய்வுபெறும் போது கல்வி ஆண்டு இறுதிவரை மறுநியமனம் செய்வதற்கு பதிலாக கேரள மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது போல கல்வி ஆண்டின் இறுதி நாளையே ஒய்வு பெறும் நாளாக அறிவித்திடல் வேண்டும்.

16. சுயநிதி கல்லூரிகள்/வகுப்புகளில் ஆசிரியர்கள் நியமனம் பெற்றவுடன் மண்டலக் கல்லூரி கல்வி இணை இயக்குனர் அவர்களுக்கு பணியிட ஒப்புதலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

17. சுயநிதி ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயத்துள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் ஆசிரியர்களுக்கான பணிப்பழுவை முழுமையாக அமல்படுத்த வேண்டும்.

18. ஒய்வு பெற்ற ஆசிரியர்களை சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் வகுப்புகளில் பணியமர்த்த கூடாது. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை சுயநிதி வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக பயன்படுத்தக்கூடாது. அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட வேண்டும்.

19. தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கை குழுவின் (JAC) கருத்தின் அடிப்படையில் தனியார் கல்லூமரி ஒழுங்காற்றுச் சட்டத்தில் உரிய திருத்தங்களை செய்ய வேண்டும்.

20. அரசு உதவிபெறும் கல்லூரிகளிலுள்ள அனைத்து ஆசிரியர் காலிப்பணியிடங்களை உடனடியாக இடஒதுக்கீட்டு கொள்கையை கறாராக அமுல்படுத்தி நிரப்பிட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படும் பொழுது SC/ST க்கு உரிய Back log காலியிடங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

21. தமிழக கல்லூரிகளில் ஒவ்வொரு இளங்கலை, இளம் அறிவியல் பாட பிரிவுகளிலும் குறைந்த பட்சம் மாணவர் சேர்க்கை 20 என்ற விதியை தமிழக அரசு தளர்த்தி ஆசிரியர்களுக்கு உரிய பணி பாதுகாப்பளித்திட வேண்டும்.

22. அழகப்பா பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம் தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலை கழகங்கள் ஆகியவற்றில் நிர்வாக அமைப்புகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகளாக இல்லாமல், நியமன உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புகளாகவே செயல்படுகின்றன. ஆகவே கல்லூரிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அடிப்படையில் கல்லூரி ஆசிரியர்களும் பல்கலைக்கழக நிர்வாக அமைப்புகளில் உறுப்பினர்களாக செயல்படும் வகையில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாக மாற்றுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

23. மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியை தனியார் சுயநிதி பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கெதிராக போராடிவரும் அக்கல்லூரி ஆசிரியர் அலுவலர் மீது நிர்வாகம் ஊதிய உயர்வு வெட்டு, தற்காலிக பணி நீக்கம், பணி நீக்க அறிவிக்கை போன்ற பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய மாநில அரசுகள் வழங்கும் நிதியை முறைகேடாக பயன்படுத்தி வருகிறது. சுயநிதி பிரிவுகளுக்கு அரசின் நிதி திசை திருப்பப்படுகிறது. அரசு உதவிபெறும் ஆசிரியர்கள் சுயநிதி பாடப்பிரிவுகளுக்கு வகுப்பெடுக்க நிர்ப்பந்திக்கபடுகின்றனர். ஆகவே கல்லூரியின் பழிவாங்கும் நடவடிக்கையை நிறுத்திடவும். அக்கல்லூரி மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கையை அரசும், தொழில் நுட்பக் கல்வித்துறையும் எடுக்க வேண்டும்.

24. அருமனை வேலுத்தம்பி தளவாய் நினைவு கல்லூரி நிர்வாகம் நிதிநிர்வாக சீர்கேடுகளையும் ஆசிரியர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. ஆசிரியர் நியமனத்தில் 5லட்சம் ரூபாய் வரை நன்கொடை வசூல் செய்யப்படுகிறது. முறையான சம்பளம் வழங்கப்படுவதில்லை. பேரா. அசோக் குமார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பேரா. ஜாஸ்மின் சுதா கல்லூரி முதல்வரால் ஈவ்டீசிங் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் தற்காலிக பணிநீக்கமும் செய்யப்பட்டுள்ளார். ஆகையால் தமிழக அரசு கல்லூரி நிர்வாகத்தின் மீது முறையான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்தும் பணிநீக்கம், தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீளப்பணியிலமர்த்தியும் நியாயம் வழங்க வேண்டும்.

25. போடி நாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்க கல்லூரி நிர்வாகம் பல நிதிநிர்வாக முறைகேடுகளை செய்து வருகிறது. அதற்கெதிராக போராடிய மூன்று மூத்த ஆசிரியர்கள் பேரா.ஆண்டிவேல், பேரா. சிவானந்தம், பேரா. பாலசுப்பிரமணியன் ஆகியோருக்கு ஊதிய வெட்டுகள் வழங்கியும் பழிவாங்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆகவே தமிழக அரசு அக்கல்லூரியில் நிதி முறைகேடுகள் குறித்து சிறப்பு தணிக்கைக்கு உத்தரவிட வேண்டும்.

26. மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி நிர்வாகம் நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாலும் தொடர்ந்து அரசு மற்றும் பல்கலைகழக விதிகளையும், ஆணைகளையும் மீறியதாலும், தமிழக அரசு அக்கல்லூரி நிர்வாகத்தை சிறப்பு அலுவலர் மூலம் இரண்டாண்டுகள் நிர்வகித்தது. இதற்கு பின்னர் பொறுப்பேற்ற கல்லூரி நிர்வாகம் தன் நடவடிக்கையை திருத்திக்கொள்ளாமல் ஓய்வூதிய பயன்களை ஆசிரியர் அலுவலர்க்கு மறுத்தும் சுயநலத்திற்காக கல்லூரி மரங்களை வெட்டியும் புகைப்படம் எடுத்த பேராசிரியர் ராஜமாணிக்கத்தை ரவுடிகளை வைத்து தாக்கியும் தற்காலிகப்பணி நீக்கம் செய்தும் பழிவாங்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து செய்துவருகிறது. ஆகவே சமூகமான கல்வி சூழல் நிலவ அரசே இக்கல்லூரி நிர்வாகத்தை ஏற்று நடத்திட வழிவகை செய்ய வேண்டும்.

27. தூத்துக்குடி காமராசர் கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வர் ஆகியோரின் நிதி நிர்வாக சீர்கேடுகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆசிரியர்களும் அலுவலர்களும் போராடி வருகின்றனர். அவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை நிர்வாகம் தொடுத்துள்ளது. ஆகவே அக்கல்லூரியின் நிதிநிர்வாக சீர்கேடுகள் மீது தமிழக அரசு சிறப்புத்தணிக்கை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

28. ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரியின் நிதிநிர்வாக சீர்கேடுகள் மீது சிறப்பு தணிக்கை நடத்திட வேண்டுமென்று 1983 இல் உயர்கல்விதுறையால் ஆணையிடபட்டது. ஆனால் இதுவரையிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிர்வாகத்தின் சீர்கேடுகளும், ஆசிரியர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன. ஆகவே ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ள சிறப்பு தணிக்கையினை உடனடியாக நடத்தி தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

29. மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் விதிகளுக்குப் புறம்பாக பணிநீக்கம் செய்யப்பட்ட பேரா.பரத்தை நிர்வாகம் மீண்டும் பணியிலமர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

30. ஓராண்டுக்குக் குறைவான FIP பதிலி நியமன காலத்தை பணி மேம்பாட்டிற்கு கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

31. பல உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடமும் பெற்றோரிடமும் அரசு விதிமுறைகளை மீறி பல்வேறு பெயர்களில் சட்ட விரோத கட்டண வசூல் நடைபெற்று வருகிறது. அத்தகைய கல்வி நிறுவனங்கள் மீது தமிழகஅரசு சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும்

32. லிங்டோ கமிட்டி பரிந்துரைப்படி தமிழகத்திலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அவற்றில் இணைவு பெற்றுள்ள கல்லூரிகளிலும் மாணவ பேரவை தேர்தல் நடத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

33. தமிழக பல்கலைக் கழகங்களில் CBCS திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இதன் செல்பாடுகளை தமிழக அரசும், தமிழ்நாடு உயர்கல்வி மன்றமும் பரிசீலித்து CBCS இல் உரிய மாற்றங்களை செய்ய வேண்டும்.

34. துறை, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக அளவில் அகமதிப்பீட்டில் உள்ள குறைகளை களைந்திடும் வகையில் மூன்றடுக்கு குறைதீர்க்கும் முறையை ஏற்படுத்திட தமிழக அரசும் தமிழ்நாடு உயர் கல்விமன்றமும் முன்வரவேண்டும்.

35. மையப்படுத்தப்பட்ட தேர்வுத்தாள் திருத்தும் பணியை விடுமுறை காலங்களுக்குள்ளாகவே (Twin Vacation) முடிக்கும் வண்ணம் தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் திட்டமிடவேண்டும். மேலும் தேர்வுத்தாள் திருத்தும் பணி மற்றும் இதரதேர்வு பணிகளுக்கான இதரபணிக் காலத்தை 15 நாட்களிலிருந்து 30 நாட்களாக உயர்த்த வேண்டும்.

36. கல்லூரிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தாக்க பயிற்சி, புத்தொளிப் பயிற்சி அளித்திடும் வகையில் JAC வுடன் கலந்து தமிழக அரசு திட்டம் உருவாக்கிடல் வேண்டும். இவற்றை ஆசிரியர்களின் பணி மேம்பாட்டோடு தொடர்பு படுத்தக்கூடாது.

37. மதுரை MTN கல்லூரி போராட்ட காலத்தை பணி செய்து ஈடுகட்டியதால் அதை பணிக்காலமாக கருதி ஊதியம் வழங்க வேண்டும்.

38. ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே வழங்கப்பட வேண்டும்.

39. DCE. RJDCE அலுவலகத்தில் உள்ள காலிப்பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும்.

40. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு அரசுக்கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல இலவச பேருந்து சலுகை வழங்க வேண்டும்.

41. சுயநிதி கல்லூரி/வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு அரசுக்கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும், கல்வி உதவித் தொகை, கல்வி கட்டணச்சலுகை, இலவச பேருந்து சலுகை போன்றவற்றை வழங்க வேண்டும்.

42. தமிழகத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமனத்தில் அரசியல் தலையீட்டை தவிர்த்து வெளிப்படைத்தன்மையை கடைப்பிடிக்கவேண்டும்.

43. RJDCE அலுவலகத்திற்கு அனுப்பப்படும் PF, ELSurrender, Pay arrear பட்டியல்களுக்கு பள்ளிக்கல்வித்துறையிலுள்ளது போல் அந்த மாத இறுதிக்குள்ளேயே ஒப்புதல் வழங்க வேண்டும்.

## பல்கலைக்கழகங்கள் நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள் :

1. சுயநிதிக்கல்லூரிகள் மற்றும் வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு முறையான நியமன ஆணை, UGC ஊதிய விகிதம், பணிபாதுகாப்பு, வங்கிமூலமாக ஊதியம், PF பங்களிப்பு, ESI வசதி, மகப்பேறு விடுப்பு, மருத்துவவிடுப்பு மற்றும் இதரவிடுப்புகளை உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களைப்போல் வழங்குவதற்கு பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. பல்கலைக்கழகங்கள் அனைத்து சுயநிதி ஆசிரியர்களின் பட்டியலைப் பெற்று அவர்களை பாடவாரியாக பணி மூப்பு பட்டியலில் சேர்க்க வேண்டும்.

3. சுயநிதி கல்லூரிகள்/வகுப்புகளில் ஆசிரியர்கள் நியமனம் பெற்றவுடன் பல்கலைக்கழகம் அவர்களுக்கான தகுதி ஒப்புதலை (Qualification approval) வழங்க வேண்டும்.

4. தமிழக பல்கலைக் கழகங்களில் CBCS திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இதன் செயல்பாடுகளை பல்கலைக்கழகங்கள் பரிசீலித்து CBCS இல் உரிய மாற்றங்களை செய்ய வேண்டும்.

PRINT POINT 234396